
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1034

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## உடன்பிறப்பே

நீரை.மகேந்திரன்

138

**தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த சாத்தூர் பாலகிருஷ்ணன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

# வரலாற்றில் வாழும் : சாத்தூர் பாலகிருஷ்ணன்!

1975-ஆம் ஆண்டு, இந்திய அரசியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஆண்டு. நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டு, நாடு முழுவதும் ஜனநாயக உரிமைகள் நசுக்கப்பட்டு, பத்திரிகைகளுக்குத் தணிக்கை விதிக்கப்பட்டு, தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். இந்தியாவின் பெரும்பாலான அரசியல் கட்சிகள் அந்தச் சூழலில் அமைதி காத்தன. ஆனால், தமிழ்நாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக அரசு, ஜனநாயகத்தைக் காக்கும் புகலிடமாக விளங்கியது. கருத்துரிமைக்குக் குரல் கொடுத்து நின்றது. அதற்காக, ஆட்சியையும், உடன்பிறப்புகளின் இன்னுயிரையும் விலையாகக் கொடுத்தது.

சென்னை மத்திய சிறைச்சாலையில், 23 வயது இளைஞராக அடைக்கப்பட்ட, இன்றைய கழகத் தலைவர் உள்ளிட்ட கழகத்தினர் கொடூர தாக்குதலை சந்தித்தனர். “என் கையில் இருக்கும் இந்த வடு, அன்று நாங்கள் சிறையில் அனுபவித்த சித்திரவதையின் அடையாளம்” என்பார் கழகத் தலைவர்.

அன்று, இயக்கத்தின் இளம் தலைவரை காக்க தன் உடலையே கேடயமாக்கிய நாடாளுமன்ற உறுப்பினர் சிட்டிபாபு, சிறையிலேயே மரணம் எய்தினார். அவரைப் போலவே, மிசா சிறைக் கொடுமையில் மரணமடைந்த மற்றொரு மாவீரர் சாத்தூர் பாலகிருஷ்ணன். சாத்தூர் கிளைக் கழகத்தின் செயல்வீரர். கொள்கையில் உறுதிப்பாடு கொண்ட அன்பு உடன்பிறப்பு.

### அஞ்சாத ஆளுமை

“தொண்டர்களின் வியர்வையே இந்த இயக்கம். அவர்களின் உழைப்பே கழகத்தின் மாண்பு. அவர்களால் வந்த வாழ்வுதான் எல்லாம். ‘எனக்கு இந்தப் பதவி வேண்டும், அந்தப் பதவி வேண்டாம்’ என்று என்றைக்கும் கேட்டறியாதத் தொண்டர்களில் ஒருவர். கழகம் இட்ட கட்டளைகளை சிரமேற்கொண்டு அயராது பணியாற்றியவர். சுயமரியாதை இயக்க காலம்தொட்டு தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா வழியில் தன்னை இணைத்துக்கொண்டு அனைவருடனும் தோளோடு தோள் நின்று பணியாற்றியவர்” என முத்தமிழறிஞர் பெருமையுடன் குறிப்பிட்ட உடன்பிறப்பு சாத்தூர் பாலகிருஷ்ணன்.

உயரமான தோற்றமும், அஞ்சாத ஆளுமையும் கொண்டவர் பாலகிருஷ்ணன். திராவிட இயக்கத்தில் இருந்து செயல்பட்ட பழம்பெரும் பணியாளர். கழகத்தின் தொடக்க காலத்திலேயே வாழ்நாள் தொண்டராகத் தன்னை இணைத்துக்கொண்டவர். சாத்தூரில் கிளைக் கழகத்தின் செயல்வீரராக செயல்பட்டவர். கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம், இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் எனக் களம் பல கண்டவர். அன்றைய ஒன்றுபட்ட ராமநாதபுரம் மாவட்டத்தில், பாலகிருஷ்ணன் துடிப்பான கழகச் செயல்வீரர்.

கழகம் இட்ட கட்டளைகளை, சாத்தூர் பகுதியில் தட்டாமல் செயல்படுத்தியவர். ‘விளக்கக் கூட்டம் நடத்துக, கழக நிதி திரட்டுக’ எனத் தலைமைக் கழகம் அறிவித்தால், “இதோ நாங்கள் தயார், செயலாற்ற” எனக் கூறிடும் கழகக் கண்மணிகளுக்கு பாலகிருஷ்ணன் தலைமை தாங்குவார்.

### மிசா கொட்டடி

கழக வரலாற்றில் மிசா காலகட்டமும், அதில் சாத்தூர் பாலகிருஷ்ணன் இறப்பும்




தவிர்க்க முடியாத அத்தியாயம். கலைஞர் தன்னந்தனியாக ஒரு தொண்டரின் இறப்புக்குச் சென்று திரும்பிய அந்த நாட்கள், நெருப்பாற்றின் எதிர்நீச்சல் நாட்கள். கழகத்தின் அமைப்புச் செயலாளராக இருந்த எஸ்.எஸ்.தென்னரசு அவர்கள், தனது ‘பெண்ணில்லாத ஊரிலே’ தொகுப்பில், சாத்தூர் பாலகிருஷ்ணன் குறித்த நினைவுகளை எழுதி இருக்கிறார்.

கழகத்தினர் மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டு, பல வகைகளில் சிறைக் கொடுமைகளை அனுபவித்து வந்த நிலையில், 1976-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் 4-வது பிளாக்கில் அடைக்கப் பட்டிருந்த சாத்தூர் பாலகிருஷ்ணனுக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டுள்ளது.

தலைவருக்கு நெருக்கமானவர். கொள்கையில் உறுதிப்பாடு கொண்ட தோழர் பாலகிருஷ்ணன் உடல் மறுநாள்தான் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்பதால், அந்தத் தகவலை தலைவர் கலைஞருக்குச் சொல்ல நினைக்கிறார் தென்னரசு. அந்த நாளில் நினைவுகளைப் பகிர்ந்துகொள்ளும் எஸ்.எஸ்.தென்னரசு அவர்களின் உடன்பிறந்த சகோதரர், 90 வயதை நெருங்கும் எஸ்.எஸ். அருணாச்சலம் அவர்கள் குறிப்பிடுகையில்,

“அண்ணன் தென்னரசு அவர்களுக்கு உடல்நலம் சரியில்லை. வெளியிலிருந்து மருந்து வாங்க வேண்டும் எனச் சிறையில் இருந்து தகவல் வந்தது. உடனடியாக, அங்கு சென்றதும் சாத்தூர் பாலகிருஷ்ணன் இறந்த தகவலை கூறிய அண்ணன், அதைத் தலைவரிடம் சென்று நேரில் கூற வேண்டும் என அனுப்பி வைத்தார். பத்திரிகைகள் தணிக்கை செய்யப்பட்ட அந்தக் காலத்தில் தலைவர் கலைஞரிடம் இந்த சோக செய்தியை சேர்த்ததுடன், இறுதி அஞ்சலி செலுத்த வந்த தலைவர் அவர்களுக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடு செய்வதிலும் உறுதுணையாக இருந்தேன்” என்கிறார்.

> “பதவி என்பது வரும் போகும். ஆனால், கொள்கை என்பது அப்படி அல்ல. நிலையானது, இலட்சியம் உயர்வானது, அந்தக் கொள்கையைக் காக்கவும், இலட்சியத்தைக் காக்கவும் பாலகிருஷ்ணன் பாடுபட்டார்!”

### கொட்டும் மழையில் பயணம்

அப்போது, கலைஞருக்கு துணையாக யார் இருந்தாலும் அவர்கள் கைது செய்யப்பட்ட நிலையில், யார் துணையும் இன்றி, சாத்தூர் பாலகிருஷ்ணன் உடலுக்கு அஞ்சலி செலுத்த கிளம்பினார்.

கலைஞரின் காரை ஓட்டுவதற்கு ஆள் இல்லாத நிலையில், அன்று பக்கத்தில் இருந்த முன்னாள் அமைச்சர் கண்ணப்பன் அவர்கள் முன்வந்துள்ளார். மாலை 6 மணிக்கு சென்னையில் புறப்பட்டு, திருச்சியில் கொட்டுகிற மழையில் சாலையில் வரவேற்ற அன்பில் தர்மலிங்கம் அவர்களை அழைத்துக்கொண்டு, இரவு ஒரு மணி அளவில் மழையிலேயே பயணப்பட்டார் கலைஞர்.

“காலை 10 மணிக்கு சாத்தூருக்குள் நுழைந்தால், கண்களில் நீர் தாரைத் தாரையாக வழிந்தோட கழகக் கண்மணிகள் பாலகிருஷ்ணன் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார்கள். என்னைக் கண்டதும் வெடித்து அழுத குடும்பத்தாரைக் கண்டு தேற்ற முடியாமல் நின்றேன். எனக்கே ஆறுதல் சொல்ல அங்கே ஆட்கள் தேவைப்பட்டது. நான் இறுதி அஞ்சலி செலுத்தியவுடன் அந்தத் தியாகச் செம்மலின் இறுதி ஊர்வலம் புறப்பட்டது. எரியூட்டப்பட்ட இடத்தில் இரங்கலுரையாற்றி அஞ்சலி செலுத்தினேன். அன்று இரவே 12 மணியளவில் சென்னை வந்து சேர்ந்தேன். மனச்சோர்வும், சோகமும் என்னை சூழ்ந்திருந்தன” என அந்த நாளை, நெஞ்சுக்கு நீதியில் பதிவு செய்துள்ளார் கலைஞர்.

மிசா சிறையில் தொண்டர்கள் படும் சித்ரவதைகள், கொடுமைகள், கொடூர தாக்குதல்களுக்கு எதிராக, வெளியில் இருந்து சட்ட நெருக்கடிகளை அளித்து வந்தார் கலைஞர். அப்படியான நிலையில், சாத்தூர் பாலகிருஷ்ணனின் இறப்பும், அவருக்கு இறுதி மரியாதை அளிக்க கழகத் தலைவர் கலைஞர் நேரில் சென்று வந்ததும் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தொண்டர்களுக்கு நம்பிக்கையை அளித்தது.

அடுத்த நாள், உடன்பிறப்புகளுக்கு எழுதிய கடிதம், கண்ணீரால் நிறைந்தது. அதுதான், அந்தக் கடிதமே பாலகிருஷ்ணன் மறைவை உலகுக்கு உருக்கமாகச் சொன்னது.

“பதவி என்பது வரும் போகும். ஆனால், கொள்கை என்பது அப்படி அல்ல. நிலையானது, இலட்சியம் உயர்வானது, அந்தக் கொள்கையைக் காக்கவும், இலட்சியத்தை காக்கவும் பாலகிருஷ்ணன் பாடுபட்டார். அவர் இத்தனை நாட்கள் உழைத்த உழைப்புக்கெல்லாம், பட்ட பாட்டிற்கெல்லாம் கலசம் அமைத்தாற்போல அவருடைய சாவும் சரித்திர ஏடாகிவிட்டது. உடன்பிறப்பே, நமது கண்ணீரால் அவர் கால்களைக் கழுவுவோம். நமது கண்ணீர் சங்கமமாகட்டும், மறைந்தவரின் இலட்சியங்களை நிறைவேற்ற உறுதி எடுத்துக்கொள்வோம். அவர் வாழ்க, அவர் பெயர் நிலைத்திடுக” என எழுதினார் கலைஞர். கழக வரலாறாக கலைஞரின் எழுத்து நிலைத்துள்ளது; கழகத் தொண்டர் சாத்தூர் பாலகிருஷ்ணன் நிலைத்து நிற்பார்.

...துடிக்கும்

## ஆர்.என்.ரவியின் அவதூறும் கண்டன ஆர்ப்பாட்டமும்!

அமைதிப் பூங்காவான தமிழ்நாட்டின்மீது, அவதூறு பரப்பும் வகையில், ‘தீவிரவாதம் தலைதூக்கி நிற்பதாக’ அபாண்டமாக அவதூறுப் பிரச்சாரம் செய்து இருக்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி. அவரின் அவதூறுப் பேச்சுக்கு கண்டனம் தெரிவித்து ஆர்ப்பாட்டம் அறிவித்துள்ளது திராவிடர் கழகம். இதுதொடர்பாக, ஆசிரியர் கி.வீரமணி விடுத்துள்ள அறிக்கையில், “ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க. அரசு தனக்கு என்ன கட்டளையிட்டதோ, எத்தகைய குழப்பங்களை விளைவிக்க வேண்டும் என்று ஆணையிட்டதோ அவற்றை நோக்கி செயலாற்றுவதே தன்னுடைய முதல் கடமை, என்று பா.ஜ.க. ஆளுநர் செயல்படுகிறார்.


தமிழ்நாட்டின் மீது தவறான எண்ணத்தை ஒடிசாவிலும், பீகாரிலும் இந்திய பிரதமர் மோடி உருவாக்குகிறார். அமைதிப் பூங்காவாகத் திகழும் தமிழ்நாட்டில் உட்கார்ந்துகொண்டு, தமிழ்நாட்டு மக்களின் வரிப்பணத்தைச் சம்பளமாக வாங்கிக்கொண்டிருக்கும் ஆளுநர் தமிழ்நாட்டையும், தமிழ்நாட்டு மக்களையும் இழித்துரைப்பதை, பொய்யுரைப்பதை, தமிழர்களின் சுயமரியாதையைக் குறிவைப்பதை ஒருநாளும் பொறுத்துக் கொள்ள முடியாது. இது தந்தை பெரியாரின் தன்மான திராவிட மண்! தமிழ்நாட்டையும், தமிழ்நாட்டு மக்களையும், தீவிரவாதப் போக்குடையவர்கள், பிரிவினைவாதிகள் என்றெல்லாம் அவதூறு பேசும் ஆளுநரைக் கண்டித்து, திராவிடர் கழகத்தின் சார்பில், தமிழ்நாடு முழுவதும் டிசம்பர் 4-ஆம் தேதி அன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்” எனத் தெரிவித்துள்ளார்.

‘திராவிடர் ஒரு தனி இனம் என்கின்றனர். தமிழ் மொழி, மற்ற மொழிகளுடன் தொடர்பு இல்லாதது என்று கூறுகின்றனர். இவை அனைத்தும், அய்ரோப்பிய சிந்தனைகளால் விதைக்கப்பட்டவை’ என்றும் ஆர்.என்.ரவி கூறியிருந்தார். அதற்கும் பதிலளித்துள்ள ஆசிரியர் கி.வீரமணி, “இப்படிப் புளுகு மூட்டைகளை வைத்து, அற்ப அரசியல் – ஆதாரமில்லா – முரண்பாடுகளை முன்வைக்கும் முக்காட்டு அரசியல் முகமூடி தமிழ்நாட்டில் கழன்றுவிடுவது உறுதி. திராவிடம் வேறு; பாரதம் வேறு என்று நாங்கள் சொல்லவில்லை; மனுஸ்மிருதி 10-ஆம் அத்தியாயம், 44-வது சுலோகம் கூறுகிறது. ‘பாகவதம்’ புராணத்திலும் திராவிடம்’ உள்ளது” என்று விளக்கியுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



கவிஞர்.சு.த.மூர்த்தி



### குற்றாலத்தில் தலைவருக்கு வரவேற்பு!

2003-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டத்துக்கு இளைஞர் அணி நிகழ்ச்சிகளுக்காக வருகை தந்திருந்தார் உயிரனைய கழகத் தலைவர் அவர்கள். மாவட்டத்தின் ஒவ்வோர் ஊரிலும் தடம் பதித்து வந்தவர், குற்றாலம் வி.கே.என். விடுதியில் தங்கிய போது, அவரை வரவேற்று மரியாதை செய்தேன். அப்போது எடுத்த புகைப்படம். அந்த ஆண்டுதான், தலைமைக் கழக சொற்பொழிவாளராகப் பதிவு செய்யப்பட்டேன். எனது நாற்பது ஆண்டுக் கால அரசியல் பயணத்தின் வரலாற்றுப் பதிவு இந்தப் படம்.

**– கவிஞர்.சு.த.மூர்த்தி, தலைமைக் கழகச் சொற்பொழிவாளர். சங்கர் நகர், திருநெல்வேலி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### மேடையிலேயே நிதி திரட்டல்!

1963-ஆம் ஆண்டு, திருவண்ணாமலை இடைத் தேர்தலில் கழக வேட்பாளர் ப.உ.சண்முகம் வெற்றிபெற்றார். சென்னையில் நடைபெற்ற வெற்றி விழா பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய கழகப் பொருளாளர் கலைஞர், 1967-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழக நிதியாக ரூ.10 லட்சம் திரட்ட வேண்டும் என அறிவித்தார். கழகப் பொருளாளர் என்கிற முறையில், அந்த மேடையிலேயே நிதி திரட்டும் பணியையும் தொடங்கி வைத்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131